இனத்தாற்றி யெண்ணுத வேந்தன் சினத்தாற் சிறிற் சிறுகுந் திரு. [றிச் 8

செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன் வெருவந்து வெய்து கெடும். 9

சுல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ லதுவல்ல தில்லை நிலக்குப் பொறை. 10

58. கண்ணோட்டம்

கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
உண்மையா னுண்டிவ் வுலகு. 1

கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை. 2

பண்ணென்னும் பாடற் கியைபின்றேற் கண்ணென்னுங்
கண்ணோட்ட மில்லாத கண். 3

உளபோன் முகத்தெவன் செய்யு மளவிற்றே
கண்ணோட்ட மில்லாத கண். 4

கண்ணிற் கணிகலங் கண்ணோட்ட மஃதின்றேற்
புண்ணென் றுணரப் படும். 5

மண்நோக் கிடையந்த மாத்தானையர் கண்நோக்கி
டையந்துகண் ணோடா தவர். 6

கண்ணோட்ட மில்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்ட மின்மையு மில. 7

கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை யுடைத்திவ் வுலகு. 8

ஒறுத்தாற்றும் பண்பிலர் கண்ணுங்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை. 9

பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர். 10

58

59. ஒற்றூடல்

ஒறறு முறைசான்ற நூலு மிவையிரண்டுங்
தெற்றென்க மன்னவன் கண். 1

எல்லார்க்கு மெல்லாம் நிகழ்பவை யெஞ்ஞான்
வல்லறிதல் வேந்தன் றொழில். [றும் 2

ஒற்றினு ணெற்றிப் பொருடெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில். 3

வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்
னினைவதையு மாராய்வ தொற்று. [ரும் 4

கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டும்
உகாஅமை வல்லதே யொற்று. 5

துறந்தார் படிவத்த ரார்கி இறந்தாராய்ந்
தென்செயினுஞ் சோர்விலை தொற்று. 6

மறைந்தவை கேட்கவற் றாகி அறிந்தவை
ஐயப்பா டில்லதே யொற்று. 7

ஒற்றொற்றித் தந்த பொருளையு மற்றுமோர்
ஒற்றினு லொற்றிக் கொளல். 8

ஒற்ருற் றுணராமை யாள்க உடன்மூவர்
சொற்ருெக்க தெறப் படும். 9

சிறப்பறிய ஒற்றின்கட் செய்யற்க செய்யிற்
புறப்படுத்தா ருகும் மறை. 10

60. ஊக்கமுடைமை

உடைய ரென்ப்படுவ தூக்கமஃ தில்லார்
உடைய துடையரோ மற்று. 2

உள்ள முடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும். 2

ஆக்க மிழந்தேமென் றல்லாவா ருக்கம்
ஒருவந்தங் கைத்துடை யார். 3

ஊக்க மதர்விளைப்ச் செல்லு மசைவிலா
ஆக்க முடையா னுழை. 4

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு. 5

உள்ளுவ தெல்லா முயர்வுள்ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து. 6

சிதைவிடத் தொல்கா ருரவோர் புதையம்பிற்
பட்டுப்பா நின்றுங் களிறு. 7

உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து

வள்ளிய மென்னுஞ் செருக்கு. 8

பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின். 9

உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு. 10

60

61. மடியின்மை

குடியென்னுங் குன்று விளக்கம் மடியென்னும்
மாசூர மூய்ந்து கெடும். 1

மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர். 2

மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியுந் தன்னினு முந்து. 3

குடிமடிந்து குற்றம் பெருகும் மடிம்டிந்து
மாண்ட வுளுற்றி லவாக்கு. 4

நெடுநீர் மறவி மடிதுயி லஞ்சுங்
கெடுநீரார் காமக் கலன். 5

படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடி
மாண்பய னெய்த லரிது [யுடையார் 6

இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட வுளூற்றி லவர். 7

மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் னென்னுர்க்
கடிமை புகுத்தி விடும். 8

குடியாண்மை யுள்வந்த குற்ற மொருவன்
மடியாண்மை மாற்றக் கெடும். 9

மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
றுஅய தெல்லா மொருங்கு. 10

61

62. ஆள்வினையுடைமை

அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். 1

வினைக்கண் வினைகெட லோம்பல் வினைக்குறை
தீர்ந்தாரிற் றீர்ந்தன் றுலகு. 2

தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்
வேளாண்மை யென்னுஞ் செருக்கு. [றே 3

தாளாண்மை யில்லாதான் வேளாண்மை
வாளாண்மை போலக் கெடும். [பேடிகை 4

இன்பம் விழையான் வினைவிழைவான் றன்
துன்பந் துடைத்தூன்றுந் தூண். [கேளிர் 5

முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். 6

மடியுளாண் மாமுகடி யென்ப மடியிலான்
தாளுளா டாமரையி னாள். 7

பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி. 8

தெய்வத்தா னாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். 9

ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துளூற்று பவர். 10

63. இடுக்கணழியாமை

இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில். 1

வெள்ளத் தனைய இடும்பை அறியுடையான்
உள்ளத்தி னுள்ளக் கெடும். 2

இடும்பைக் கிடும்பை படுப்ப ரிடும்பைக்
கிடும்பை படாஅ தவர். 3

மடுத்தவா யெல்லாம் பகடன்ரு னுற்ற
இடுக்க ணிடர்ப்பா டுடைத்து. 4

அடுக்கி வரினும் அழிவிலா னுற்ற
இடுக்க ணிடுக்கட் படும். 5

அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்
ரும்புதல் தேற்ரு 'தவர். 6

இலக்க முடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாரூக் கொள்ளாதா மேல். 7

இன்பம் விழையான் இடும்பை யியல்பென்
துன்ப முறுத லிலன். [பான் 8

இன்பத்து ளின்பம் விழையாதான் துன்பத்துட்
டுன்ப முறுத லிலன். 9

இன்னமை இன்ப மெனக்கொளின் ஆகுந்தன்
ஒன்னார் விழையுஞ் சிறப்பு. 10

63

64. அமைச்சு

கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யும்
அருவினையு மாண்ட தமைச்சு. 1
வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் லாள்விணையோ

டைந்துடன் மாண்ட தமைச்சு. 2

பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தாரைப்
பொருதகலும் வல்ல தமைச்சு. 3

தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச்4
சொல்லலும் வல்ல தமைச்சு

அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்
றிறனறிந்தான் றோச்சித் தூணை. றும் 5

மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற பவை. 6

செயற்கை யறிதகக் கடைத்து முலகத்
தியற்கை யறிந்து செயல். 7

அறிகொன் றறியா னெனினு முறுதி
உழையிருந்தான் கூறல் கடன். 8

பழுதெண்ணும் மந்திரியிற் பக்கதுட் டெவ்வோ
ரெழுபது கோடி யுறும். 9

முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர். 10

64

65. சொல்வன்மை

காதல மென்னும் கலனுடைமை யங்கலம்
யாதலத் துள்ளதூஉ மன்று. 1

ஆக்கமுங் கேடு மதனல் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு. 2

கேட்டாரப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல். 3
திறனறிந்து சொல்லுக சொல்லி யறனும்
பொருளு மதனினூஉங் கில. 4

சொல்லுக சொலலிப் பிறிதோர்சொ லச்
வெல்லுஞ்சொ வின்மை யறிந்து. [சொல்லி 5
வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்
மாட்சிபின் மாசற்றார் கோள. [கோடன் 6
சொலல்வல்லன் சோர்விலனஞ்சா னவனினி
இகல்வெல்லல யார்க்கு மரிது. 7
விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வலலார்ப் பெறின். 8
பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொலல றேற்ற தவா. 9
இணரூழ்த்த நாறு மலரனைய கற்ற
துணர விரித்துரையா தார். 10

65

66. வினைத்தூய்மை

துணைநல மாக்கந் தருஉம் வினைநலம்
வேண்டிய வெல்லாந தரும். 1

என்று மொருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை. 2

ஓஒதல் வேண்டும் மொளிமாழ்குஞ் செய்வினை
யாஅது மென்னு மவர். 3

இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர். 4

எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேன்
மற்றன்ன செய்யாமை நன்று. 5

ஈன்ருள் பசிகாண்பா ளையினுஞ் செய்யற்க
சான்ரோர் பழிக்கும் வினை. 6

பழிமலைந் தெய்திய வாக்கத்திற் சான்ரோர்
கழிநல் குரவே தலை. 7

கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதாம்
முடிந்தாலும் பீழை தரும். 8

அழக்கொண்ட வெலலாம் அழப்போ மிழப்பி
பிற்பயக்கும் நற்பா லவை. [னும் 9

சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீ இ யற்று. 10

67. வினைத்திட்பம்

வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்ப
மற்றைய வெல்லாம் பிற. 1

ஊறொரா லுற்றபி னொல்காமை இவ்விரண்டின்
ஆறென்ப ராய்ந்தவர் கோள். 2

கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை இடைக்
எற்றா விழுமந் தரும். [கொட்கின் 3

சொல்லுதல் யார்க்கு மெளிய அரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல். 4

வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்
ஊறெய்தி யுள்ளப் படும். [கண் 5

எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். 6

உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்
கச்சாணி யன்னா ருடைத்து. [தேர்க் 7

கலங்காது கண்ட வினைகட் டுளங்காது
தூக்கங் கடிந்து செயல். 8

துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை. 9

எனைத்திட்ப மெய்தியக் கண்ணும் வினைத்திட்
வேண்டாரை வேண்டா துலகு. [பம் 10

68. வினைசெயல்வகை

சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுட் டங்குதற் றீது. 1

தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை. 2

ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்காற்
செலலும்வாய் நோக்கிச் செயல். 3

வினைபகை யென்றிரண்டி னெச்சம் நிணையுங்
நீயெச்சம் போலத் தெறும. [காற் 4

பொருள்கருவி காலம் வினையிடனை டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல். 5

முடிவு மிடையூறும் முற்றியாங் கெய்தும்
படுபயனும் பாததுச் செயல். 6

செய்வினை செய்வான் செயன்முறை அவ்வினை
யுள்ளறிவா னுள்ளங் கொளல். 7

வினையான் வினையாக்கிக் கோடல் நினைகவுள்
யானையால் யானையாத் தற்று. 8

நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை யொட்டிக் கொளல. 9

உறைசிறியா ருண்ணடுங்க லஞ்சிக் குறைபெ
கொள்வா பெரியார்ப் பணிந்து. [றிற் 10

69. தூது

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடமை தூதுரைப்பான் பண்பு. 1

அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்
கின்றி யமையாத மூன்று. [பார்க் 2

நூலாரு ஜூல்வல்ல ருதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு. 3

அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு. 4

தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாந் தூது. 5

கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக்காலத்
றக்க தறிவதாந் தூது. [தாற் 6

கடனறிந்து காலங் கருதி யிடனறிந்
தெண்ணி யுரைப்பான் றலை. 7

தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றி
வாய்மை வழியுரைப்பான் பண்பு. [ன் 8

விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்ற
வாய்சோரா வன்க ணவன். [ம் 9

இறுதி பயப்பினு மெஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாந் தூது. 10

70. மன்னரைச்சேர்ந்தொழுகல்

அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார். 1

மன்னர் விழைப விழையாமை மன்னரான்
மன்னிய வாக்கந் தரும். 2

போற்றி னரியவை போற்றல் கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கு மரிது.

செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையு மவித்தொழு
ஆன்ற பெரியா ரகத்து. [கல் 4

எப்பொருளு மோரார் தொடரார்மற் றப்பொ
விட்டக்காற் கேட்க மறை. [ருஉ 5

குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல். 6

வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றுங்
கேட்பினுஞ் சொல்லா விடல். 7

இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற
ஒளியோ டொழுகப் படும். 8

கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாத

துளக்கற்ற கட்சி யவர். [செய்யார் 9
பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யுங்
கெழுதகைமை கேடு தரும். 10

71. குறிப்பறிதல்

கூருமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்
மாருநீர் வையகக் கண். [றும் 1
ஐயப் படாஅ தகத்த துணர்வாணைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல. 2
குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல. 3
குறித்தது கூருமைக் கொள்வாரோ டேனை
யுறுப்போ ரனையரால வேறு. 4
குறிப்பிற் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்
என்ன டூபத்தவோ கண். 5
அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டும் முகம். 6
முகத்தின் முதுக்குறைந்த துண்டோ உவப்பி
காயினுந் தான்முந் துறும். [னுங் 7
முகநோக்கி நிற்க அமையும் அகநோக்கி
உற்ற துணர்வார்ப் பெறின். 8
பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்குங்
வகைமை யுணர்வார்ப் பெறின். [கண்ணின் 9

துண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்
கண்ணல்ல தில்லை பிற. [காற் 10

71

72. அவையறிதல்

அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
ருகையறிந்த தூய்மை யவர். 1
இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக் சொல்
நடைதெரிந்த நன்மை யவர். [லின் 2
அவையறியாற் சொல்லன்மேற் கொள்பவர்
வகையறியார் வல்லதூஉ மில் [சொல்லின் 3
ஒளியார்முன் னெள்ளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணங் கொளல். 4
நன்றென் றவற்றுள்ளும் நன்றே முதுவருண்
மூந்து கிளவாச் செறிவு. 5
ஆற்றி னிலேதளர்ந் தற்றே வியன்புலம்
ஏற்றுணர்வார் முன்ன ரிழுக்கு. 6
கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து. 7
உணர்வ துடையார்முற் சொல்லல் வளர்வதன்
பாத்தியு ணீர்சொறிந் தற்று. 8

புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க
நன்கு செலச்சொல்லு வார் [நல்லவையுள் 9

அங்கணத்து ளுக்க அமிழ்தற்ரூற் றங்கணத்த
ரல்லார்முற் கோட்டி கொளல். 10

73. அவையஞ்சாமை

வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லி
ரெகையறிந்த தூய்மை யவர். [ன் 1

கற்ரருட்கற்ரு ரெனப்படுவர் கற்ரூர்முற்
கற்ற செலச்சொல்லு வார். 2

பகையகத்துச் சாவா ரெளிய ரரியர்
அவையகத் தஞ்சா தவர். 3

கற்ரூர்முற் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருண் மிக்க கொளல். 4

ஆற்றி னளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு. 5

வாளொடென் வன்கண்ண ரல்லார்க்கு
நூலொடென் னுண்ணவை யஞ்சு பவர்க்கு. [நூலொடென் 6

பகையகத்துப் பேடிகை யொள்வாள் அவைய
தஞ்சு மவன்கற்ற நூல். [கத் 7

பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார். 8

கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து
நல்லா ரவையஞ்சு வார். 9

உளரெனினு மில்லாரோ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார். 10

73
74. நாடு

தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு. 1

பெரும்பொருளாற் பெட்டக்க தாகி யிருங்கேட்
லாற்ற விளைவது நாடு. [டா 2

பொறையொருங்கு மேல்வருங்காற் றுங்கி யிறை
நிறையொருங்கு நேர்வது நாடு. [வற் 3

உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு. 4

பல்குழுவும் பாழ்செய்யு மூட்பகையும்வேந்தலைக்
கொல்குறும்பு மில்லது நாடு. [குங் 5

கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்று
காடென்ப நாட்டிற் றலை. 6

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறுப்பு. 7

பிணியின்மை செல்வம் விளைவின்ப மேமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து. 8

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு. 9

ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு. 10

74

75. அரண்

•

ஆற்று பவர்க்கு மரண்பொரு ளஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள். 1

மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடு முடைய தரண். 2

உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கின்
அமைவர ணென்றுரைக்கு நூல். 3

சிறுகாப்பிற் பேரிடத்த தாகி உறுபகை
ஊக்க மழிப்ப தரண். 4

கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி யகத்
நிலைக்கெளிதாம் நீர தரண். [தார் 5

எல்லாப் பொருளு முடைத்தா யிடத்துவும்

நல்லா ளுடைய தரண். 6

முறறியு முற்ரு தெறிந்து மறைப்படுத்தும்
பற்றற் கரிய தரண். 7

முற்ருற்றி முற்றி யவரையும் பற்ருற்றிப்
பற்றியார் வெல்வ தரண். 8

மூனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண். 9

எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
யில்லார்க ணில்ல தரண். 10

75

76. பொருள்செயல்வகை

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள். 1

இல்லாரை எல்லாரு மெள்ளுவர் செல்வரை
எல்லாருஞ் செய்வர் சிறப்பு. 2

பொருளென்னும் பொய்யா விளக்கம் இருள
ளண்ணிய தேயத்துச் சென்று. [றுக்கும் 3

அறனீனு மின்பமு மீனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள். 4

அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம்

புல்லார் புரள விடல். 5

உறுபொருளு முல்கு பொருளுந்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள். 6

அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு. 7

குன்றேறி யானைப்போர் கண்டற்றுற் றன்கைத்
றுண்டாகச் செய்வான் வினை. [தொன் 8

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில். 9

ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்ணி
ஏனை யிரண்டு மொருங்கு. [பொருள் 10

77. படைமாட்சி

உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாந் தலை. 1

உலைவிடத் தூறஞ்சா வன்கண் டொலைவிடத்துத்
தொல்படைக் கல்லா லரிது. 2

ஒலித்தக்கா லென்ன முவரி யெலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும். 3

அழிவின் றறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை. 4

கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை. 5

மறமான மாண்ட வழிச்செலவு தேற்ற
மெனநான்கே ஏமம் படைக்கு. 6

தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்குந் தன்மை யறிந்து. 7

அடற்றகையு மாற்றலு மில்லெனினுந் தானை
படைத்தகையாற் பாடு பெறும். 8

சிறுமையுஞ் செல்லாத் துனியும் வறுமையு
மில்லாயின் வெல்லும் படை. 9

நிலைமக்கள் சால உடைத்தெனினுந் தானை
தலைமக்க ளில்வழி யில். 10

77

78. படைச்செருக்கு

என்னை முன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை
முன்னின்று கல்நின் றவர். 1

கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவே லேந்த வினிது. 2

பேராண்மை என்ப தறுகணென் றுற்றக்கால்
ஊராண்மை மற்றது னெஃகு. 3

கைவேல் களிற்றெறு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும். 4

விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்தினைப்
ஓட்டன்றே வன்க ணவர்க்கு. [பின் 5

விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் காலே யெடுத்து. 6

சுழலு மிசைவேண்டி வேண்டா உயிரார்
கழலியாப்புக் காரிகை நீர்த்து. 7

உறினுயி ரஞ்சா மறவ ரிறைவன்
செறினுஞ்சீர் குன்ற விலர். 8

இழைத்த திகவாமைச் சாவாரை யாமே
பிழைத்த தொறுக்கிற் பவர். 9

புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பிற் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து. 10

78

79. நட்பு

செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு. 1

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு. 2

நவிலுறு நுனயம் போலும் பயிலுறும்
பண்புடை யாளர் தொடர்பு. 3

நகுதற் பொருட்டன்று நட்டன், மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற பொருட்டு. 4

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும். 5

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு. 6

அழிவி னவைநீக்கி ஆறுய்த் தழிவின்கண்
அல்ல லுழப்பதாம் நட்பு. 7

உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. 8

நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி
ஒல்லும்வா யூன்றும் நிலை. 9

இனைய ரிவரெமக் கின்னம்யா மென்று
புனையினும் புல்லென்னு நட்பு. 10

80. நட்பாராய்தல்

காடாது நட்டவிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு. 1

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடை
தான்சாந் துயரந் தரும். [முறை 2

குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்ற
இனனு மறிந்தியாக்க நட்பு. 3

குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு. 4

அழச்சொல்வி யல்ல திடித்து வழக்கறிய
வல்லார்கட் பாய்ந்து கொளல். 5

கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல். 6

ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல். 7

உள்ளற்க வுள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்க ணூற்றுப்பார் நட்பு.

கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினு முள்ளஞ் சுடும். 9

மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்தும்
ஒருவுக வொப்பிலார் நட்பு. 10

81. பழமை

பழமை யெனப்படுவ தியாதெனின் யாதுங்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு. 1

நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்
குப்பாதல் சான்றோர் கடன். 2

பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை
செய்தாங் கமையாக் கடை. 3

விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகை
கேளாது நட்டார் செயின். [யாற் 4

பேதைமை யொன்றே பெருங்கிழமை என்று
நோதக்க நட்டார் செயின். [ணர்க 5

எல்லைக்க ணின்றூர் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்க ணின்றூர் தொடர்பு. 6

அழிவந்த செய்யினும் அன்பரு ரன்பின்
வழிவந்த கேண்மை யவர். 7

கேளிழுக்கங் கேளாக் கெழுதகைமை வல்லார்க்
காளிழுக்க நட்டார் செயின். [சு 8

கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையு முலகு. 9

விழையார் விழையப் படுப பழையரார்கட்
பண்பிற் றலைப்பிரியா தார். 10

82. தீ நட்பு

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்ற லினிது. 1

உறினட் டறிஞெரூஉ மொப்பிலார் கேண்மை
பெறினு மிழப்பினு மென். 2

உறுவது சீர்தூக்கு நட்பும் பெறுவது
கொள்வாருங் கள்வரும் நேர். 3

அமரகத் தாற்றறுக்குங் கல்லாமா வன்ஞர்
தமரிற் றனிமை தலை. 4

செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தவி னெய்தாமை நன்று. 5

பேதை பெருங்கெழீஇ நட்பி னறிவுடையார்
ஏதின்மை கோடி யுறும். 6

நகைவகைய ராகிய நட்பிற் பகைவராற்
பத்தடுத்த கோடி யுறும். 7

ஒல்லுங் கரும முடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல். 8

கனவினு மின்னாது மன்னே வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு. 9

எனைத்துங் குறுகுத லோம்பன் மனைக்கெழீஇ
மன்றிற் பழிப்பா தொடர்பு. 10

83. கூடாநட்பு

சீரிடங் காணி னெறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு. 1

இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும். 2

பலநல்ல கற்றக் கடைத்து மனநல்லர்
ஆகுதன் மாணார்க் கரிது. 3

முகத்தி னினிய நகாஅ வகத்தின்னு
வஞ்சனை யஞ்சப் படும். 4

மனத்தி னமையா தவரை யனைத்தொன்றுஞ்
சொல்லிறற் றேறறபாற் றன்று. 5

நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்
ஒல்லை யுணரப் படும். [சொல் 6

சொல்வணக்க மொன்னார்கட் கொள்ளற்க வில்
தீங்கு குறித்தமை யான். [வணக்கம் 7

தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்
அழுதகண் ணீரு மனைத்து. [னர் 8

மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து
நட்பினுட் சாப்புல்லற் பாற்று. 9

பகைநட்பாய் காலம் வருங்கான் முகநட்
டகநட் பொரீஇ விடல். 10

84. பேதைமை

பேதைமை யென்பதொான் றியாதெனின் ஏதங்
தீதியம் போக விடல். [கொண் 1

பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கட் செயல். 2

நாணுமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணுமை பேதை தொழில். 3

ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில். 4

ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையுந்
தான்புக் கழுந்து மளறு. 5

பொய்ப்படு மொன்றே புனைபூணுங் கையறியாப்
பேதை விளைமேற் கொளின். 6

ஏதிலா ராரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வ முற்றக் கடை. 7

மைய லொருவன் களித்தற்றுற் பேதைதன்
கையொன் றுடைமை பெறின். 8

பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கட்
பீழை தருவதொான் றில். 9

கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றுற் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல். 10

85. புல்லறிவாண்மை

அறிவின்மை யின்மையு ளின்மை பிறிதின்மை
இன்மையா வையா துலகு. 1

அறிவிலா னெஞ்சுவந் தீதல் பிறிதியாது
மில்லை பெறுவான் தவம். 2

அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்குஞ் செய்த லரிது. 3

வெண்மை யென்ப்படுவ தியாதெனின் ஒண்மை
உடையம்யா மென்னுஞ் செருக்கு. 4

கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉ மையந் தரும். 5

அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயிற்
குற்றம் மறையா வழி. 6

அருமறை சோரும் அறிவிலான் செய்யுமும்
பெருமிறை தானே தனக்கு. 7

ஏவவுஞ் செய்கலான் ருன்றேறு னவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய். 8

காணுதாற் காட்டுவான் ருன்காணுன் காணுதான்
கண்டானுந் தான்கண்ட வாறு. 9
உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும். 10

86. இகல்

இகலென்ப எல்லா வுயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கு நோய். 1

பகல்கருதிப் பற்ரு செயினும் இகல்கருதி
இன்னுசெய் யாமை தலை. 2

இகலென்னு மெவ்வநோய் நீக்கிற் றவலில்லாத்
தாவில் விளக்கந் தரும். 3

இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னுந்
துன்பத்துள் துன்பந் கெடின். 4

இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்குந் தன்மை யவர். 5

இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலுங் கெடலும் நணித்து. 6

மிகன்மேவன் மெய்ப்பொருள் காணு ரிகன்மே
லின்னு அறி வினவர். [வல் 7

இகலிற் கெதிர்சாய்த லாக்கம் அதனை
மிகலூக்கி னூக்குமாங் கேடு. 8

இகல்காணு னுக்கம் வருங்கா லதனை

மிகல்காணுங் கேடு தரற்கு. 9

இகலானு மின்னுத வெல்லாம் சகலானு
நன்னய மென்னுஞ் செருக்கு. 10

87. பகைமாட்சி

வலியார்க்கு மாறேற்ற லோம்புக ஓம்பா
மெலியார்மேன் மேக பகை. 1

அன்பிலி னென்ற துணையிலன் தான்துவ்வான்
என்பரியு மேதிலான் றுப்பு. 2

அஞ்சு மறியா னமைவில னீகலான்
தஞ்ச மெளியன் பகைக்கு. 3

நீங்கான் வெகுளி நிறையில னெஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கு மெளிது. 4

வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழி
பண்பிலன் பற்றார்க் கினிது. [நோக்கான் 5

காணைச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணமை பேணப் படும். 6

கொடுத்துங் கொளல்வேண்டு மன்ற அடுத்தி
மாணுத செய்வான் பகை. [ருந்து 7

குணனிலனெய்க் குற்றம் பலவாயின் மாற்றுக்
கினனிலனு மேமாப் புடைத்து. 8

செறுவார்க்குச் சேணிகவா வின்ப மறிவிலா
வஞ்சும் பகைவர்ப் பெறின். 9

கல்லான் வெகுளுஞ் சிறுபொரு ளெஞ்ஞான்று
மொல்லாணை யொல்லா தொளி. 10

88. பகைத்திறந்தெரிதல்

பகையென்னும் புண்பி லதனை யொருவ
னகையேயும் வேண்டற்பாற் றன்று. 1

வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை. 2

ஏமுற் றவரினு மேழை தமியனுய்ப்
பல்லார் பகைகொள் பவன். 3

பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை
நகைமைக்கட் டங்கிற் றுலகு. [யாளன் 4

தன்றுணையின்றுற் பகையிரண்டாற் ருனெருவ
னின்றுணையாக் கொள்கவற்றி னென்று. 5

தேறினுந் தேரு விடினு மழிவின்கட்
டேருன் பகாஅன் விடல். 6

நோவற்க நொந்த தறியார்க்கு மேவற்க
மென்மை பகைவ ரகத்து. 7

வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கட் பட்ட செருக்கு. 8

இலைதாத முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து. 9

உயிர்ப்ப வுளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார். 10

88

89. உட்பகை

நிழனீரு மின்றை வின்ற தமர்நீரு
மின்றிவா மின்ற செயின். 1
வாள்போற் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள்போற் பகைவா தொடாபு. 2
உட்பகை யஞ்சித்தற் காக்க வுலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும். 3
மனமாணு வுட்பகை தோன்றி னினமாணு
வேதம் பலவுந தரும். 4
உறன் முறையா வுட்பகை தோன்றி னிறன்
னேதம் பலவுந் தரும். [முறையா 5
ஒன்றுமை யொன்றியார் கட்படி னெஞ்ஞான்
பொன்றுமை யொன்ற லரிது. [றும் 6
செப்பின் புணர்ச்சிபோற் கூடினும் கூடாதே
யுட்பகை யுறற குடி. 7

அரமபொருத பொன்போலத் தேயும் உரம்
துட்பகை யுற்ற குடி. - [பொரு 8
எட்பக வன்ன சிறுமைததே யாயினு
முட்பங்க யுளளதாங கேடு. 9
உடம்பா டிலாதவர் வாழக்கை குடங்கருட்
பாம்போ டுடனுறைந் தற்று. 10

89

90. பெரியாரைப் பிழையாமை.

ஆற்றுவா ராற்ற லிகழாமை போற்றுவார்
போற்றலு ளெலலாங் தலை. 1
பெரியாரைப் பேணு தொழுகிற பெரியாராற
பேரா விடும்பை தரும். 2
கெடல்வேண்டிற் கேளாது செய்க அடல்வேண்டி
னுறறு பவாக ணிழுக்கு. 3
கூற்றத்தைக் கையால் விளித்தறரு லாற்றுவாாக்
காற்றுதா ரின்னு செயல. 4
யாண்டுசென் றியாண்டு மூளராகா ரெவந
வேரது செறப்பட் டவர. [துப்பின் 5
எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார. 6
வகைமாண்ட வாழக்கையும் வான்பொருளு
தகைமாண்ட தக்கார செறின் [மென்னுக 7

குன்றன்னார் குன்ற மதிப்பிற் குடியொடு
நின்றன்னா மாய்வா நிலத்து. 8

ஏந்திய கொள்கையா சீறி னிடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும். 9

இறந்தமைந்த சார்புடைய ராயினு மூய்யார்
சிறந்தமைந்த சீரா செறின். 10

91. பெண்வழிச் சேறல்.

மனைவிழைவா மாண்பய னெய்தார் வினை
வேண்டாப் பொருளு மது. [விழைவார் 1

பேணுது பெண்விழைவா ரொக்கம் பெரியதோர்
நாணுக நாணுத் தரும். 2

இல்லாள்கட் டாழுந்த இயல்பின்மை யெஞ்ஞான்
றல்லாருள் நாணுத் தரும். [றும் 3

மனையாளே யஞ்சு மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்த லின்று. 4

இல்லாளே யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்றும்
நலலார்க்கு நல்ல செயல். 5

இமையாரின் வாழினும் பாடிலரே யில்லா
ளமையார்தோ ளஞ்சு பவர். 6

பெண்ணேவல் செய்தொழுகு மாண்மையி
பெண்ணே பெருமை யுடைத்து. [ணுணுடைப் 7

கட்டாங் குறைமுடியாங் கன்றற்ருர் கன்னுத
பெட்டாங் கொழுகு பவர். [லாள் 8

அறவினையு மான்ற பொருளுங் டீறவினையும்
பெண்ணேவல செய்வார்க ணில். 9

எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்
பெண்சேர்ந்தாம பேதைமையில். [ஞான்றுமை 10

91

92. வரைவின்மகளிர்.

அன்பின் விழையார் பொருள்விழையு மாய்
ரின்சொ லிழுக்குத் தரும். [தொடியா 1

பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்றூக்கி நள்ளா விடல். 2
பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்ட
லேதில் பிணந்தழீஇ யற்று. [றையி 3
பொருட்பொருளா புன்னலந்தோயார் அருட்
ளாயு மறிவி னவர். [பொரு 4
பொதுநலத்தார் புன்னலந்தோயார் மதி
மாண்ட வறிவி னவர். [நலத்தின் 5
தந்நலம் பாரிப்பார தோயார தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள. 6

நிறைநெஞ்ச மில்லவா தோய்வா பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவா தோள். 7

ஆயு மறிவின ரல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் முயக்கு. 8

வரைவிலா மாணிழையா ரென்றூள் புரையிற்
பூரியர்க ளாழு மளறு. [லா 9

இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவ்வுங்
திருநீக்கப் பட்டார் தொடர்பு. 10

92

93. கள்ளுண்ணாமை

உட்கப் படாஅ ரொளியிழப்ப ரெஞ்ஞான்றுங்
கட்காதல் கொண்டொழுகு வார். 1

உண்ணற்க கள்ளை உணிலுண்க சான்றோரா
லெண்ணப் படவேண்டா தார். 2

ஈன்றாள் முகத்தேயு மின்னாதா லென்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி. 3

நாணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளை
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு. [ன்னும் 4

கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல். 5

துஞ்சிலர் செத்தாரின் வேறலல லெஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண் பவர். 6

உவளொற்றி யுள்ளூர் நகப்படுவ லெஞ்ஞான்
கள்ளொற்றிக் கண்சாய்ப் பவர். [றுங் 7

களிந்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉ மாங்கே மிகும். 8

களிததானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று. 9

கள்ளுண்ணற்போழ்திற் களித்தானைக் காணுங்
உள்ளான்கொ லுண்டதன் சோர்வு. [கால் 10

93

94. சூது.

வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூ
தாண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று. [உங் 1

ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதாக்கு முண்டாங்
னன்றெய்தி வாழ்வதோ ராறு. [கொ 2

உருளாய மோவாது கூறிற பொருளாயம்
போஒய்ப் புறமே படும். 3

சிறுமை பலசெய்து சீரழிக்குஞ சூதின்

வறுமை தருவதொன் றில். 4

கவறுங் கழகமுங் கையுந் தருக்கி
யிவறியா ரில்லாகி யாா. 5

அகடாரா ரல்ல லுழப்பர்சூ தென்னு
முகடியான் மூடப்பட் டாா. 6

பழகிய செல்வமும் பண்புங் கெடுக்குங்
கழகத்துக் காலை புகின். 7

பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ யருள்
தல்ல லுழப்பிக்குஞ் சூது. [கெடுத் 8

உண்டசெல்வ மூணெளி கல்வியென் றைந்து
மடைப்பாவர மாயங்கொளின். 9

இழுத்தொறூஉங் காதலிக்குஞ் சூதேபோற் றுன்
முழுத்தொறூஉங் காதற் றுயிர். [ப 10

95. மருந்து

மிகினுங் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று. 1

மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின். 2

அற்ற லளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்ற னெடிதுய்க்கு மாறு. 3

அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து. 4

மாறுபா டில்லாத உண்டி மறுதுதுண்ணின்
ஊறுபா டில்லை யுயிர்க்கு. 5

இழிவறிந துண்பான்க ணின்பமபோ னிற்குங்
கழிபே ரிரையான்க ணேய். 6

தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும். 7

நோய்நாடி நோய்முத லடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். 8

உற்ரு னளவும் பிணியளவுங் காலமுங்
கற்ரருன் கருதிச் செயல். 9

உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வா
னப்பாலுற் கூற்றே மிருந்து. னென் 10

95

96. குடிமை

இற்பிறந்தார் க்ண்ணல்ல தில்லை யியல்பாகச்
செப்பமு நாணு மொருங்கு. 1

ஒழுக்கமும் வாய்மையும் நாணுமிம் மூன்று
மிழுக்கார் குடிப்பிறந் தார். 2

நகையீகை யின்சொ லிகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு. 3

அடுக்கிய கோடி பெறினுங் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்த லிலா. 4

வழங்குவ துள்வீழுந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரித லின்று. 5

சல்ம்பற்றிச் சால்பில செய்யாராமா சற்ற
குலம்பற்றி வாழதுமென் பார. 6

குடிப்பிறந்தார் கண்விளங்குங் குறறம் விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்நது. 7

நலத்தின்க ணாரிண்மை தோன்றி னவனைக்
குலத்தின்க ணையப் படும். 8

நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல். 9

நலம்வேண்டி னாணுபைமை வேண்டுங் குலம்
வேண்டுக யார்க்கும் பணிவு. [வேண்டின் 10

96

97. மானம்.

இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்
குன்ற வருப விடல். 1

சீரினுஞ் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர். 2

பெருக்கத்து வேண்டும் பணிதல சிறிய
சுருக்கத்து வேண்டு முயாவு. 3

தலையி னிழிந்த மயிரனையர் மாந்தா
நிலையி னிழிந்தக் கடை. 4

குன்றி னனையாருங் குன்றுவா குன்றுவ
குன்றி யனைய செயின். 5

புகழின்றாற் புத்தேணாட் டுய்யாதா லென்மற்
றிகழவாராபின் சென்று நிலை. 6

ஒட்டாராபின் சென்றொருவன் வாழுதலி னந்
கெட்டா னெனப்படுத னன்று [நிலையே 7

மருந்தோமற் றூனோமபும் வாழுக்கை பெருந்
பீடழிய வந்த விடத்து. [தகைமை 8

மயிரநீப்பின் வாழாக் கவரிமா வன்னா
ருயிர்நீப்பா மானம் வரின். 9

இளிவரின் வாழாத மான முடையா
ரொளிதொழு தேத்து முலகு. 10

97

98. பெருமை.

ஒளியொருவற குளள வெறுக்கை பிளியொரு
கஃதிறநது வாழுது மெனல. [வற் 1

பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்
செய்தொழில் வேற்றுமை யான். [பொல்வா 2

மேலிருந்து மேலல்லா மேலல்லா கீழிருந்து
கீழலலா கீழ்ல லவா. 3

ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
தன்னை த்தான் கொண்டொழுகி னுண்டு. 4

பெருமை யுடையவ ராற்றுவா ராறறி
னருமை யுடைய செயல. 5

சிறியா ருணர்ச்சியு ளில்லை பெரியாரைப்
பெணிக்கொள வேமென்னு நோக்கு. 6

இறப்பே புரிந்த தொழிற்ருஞ் சிறப்புந்தான்
சீரல் லவாகட் படின். 7

பணியுமா மென்றும் பெருமை சிறுமை
அணியுமாந் தன்னை வியந்து. 8

பெருமை பெருமித மின்மை சிறுமை
பெருமித மூந்து விடல். 9

அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்
குறறமே கூறிவிடும். 10

99. சான்ருண்மை

கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து

சான்றாண்மை மேற்கொள பவாக்கு. 1

குணநலஞ் சான்றோர் நலனே பிறநல
மெங்ஙனத் துள்ளதூஉ மன்று. 2

அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வாய்மை
யடைநதுசால் பூன்றிய தூண். [யோ 3

கொலலா நலத்தது நோன்மை பிறாதீமை
சொல்லா நலத்தது சாலபு. 4

ஆற்றுவா ராற்றல் பணித லதுசான்றோ
மாற்றுரை மாற்றும் படை. 5

சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றோலவி
துலையல்லா கண்ணுங் கொளல. 6

இன்றுசெய் தாக்கு மினியவே செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு. 7

இன்மை யொருவற் கிளிவன்று சால்பென்னுங்
திண்மையுண் டாகப் பெறின். 8

ஊழி பெயரினுந் தாம்பெயரா ற் சான்றாண்மைக்
காழி யெனப்படு வார். 9

சான்றவர் சான்றாண்மை குன்றி னிருநிலங்தான்
றாங்காது மன்னோ பொறை. 10

99

100. பண்புடைமை

எண்பதத்தா லெய்த லெளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு. 1

அன்புடைமை யான்ற குடிப்பிறத்த லீவ்விரண்
பண்புடைமை யென்னும் வழக்கு. [டும் 2

உறுப்பொத்தன் மக்களொப் பன்றுல் வெறுத்
பண்பொத்த லொப்பதா மொப்பு. [தக்க 3

நயனெடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டு முலகு 4

நகையுள்ரு மின்ரு திகழ்ச்சி பகையுள்ரும்
பண்புள பாடறிவா மாட்டு. 5

பண்புடையாரப் பட்டுண் டுலக மதுவின்றேன்
மண்புக்கு மாய்வது மன். 6

அரம்போலுங் கூரமைய ரேனு மரம்போல்வா
மக்கட்பண் பில்லா தவர். 7

நண்பாற்ரு ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்ரு ராதல் கடை. 6

நகல்வல்ல ரல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள். 9

பண்பிலான் பெற்ற பெருஞசெல்வட் நன்பால்
கலந்நீமை யாற்றிரிந் தற்று. 10

101. நன்றியில் செல்வம்

ஈவதான்வாய்ச் சான்ற பெருமபொரு ளஃ
தெதுதான் செயக்கிடந்த தில்.. [துண்ணென் 1

பொருளீனு மெல்லாமென் றீயா திவறு
மருளாண மாணப் பிறப்பு. 2

ஈட்ட மிவறி யிசைவேண்டா வாடவர்
தோற்ற நிலக்குப் பொறை. 3

எச்சமென் றெண்ணெண்ணுங் கொலலோ
னச்சப் படாஅ தவன். [ஒருவரா 4

கொடுப்பதூஉந் தூய்ப்பதூஉ மில்லாக் கடுக்
கோடியுண் டாயினு மில். [கிய 5

ஏதம் பெருஞ்செலவ தான்றுவ்வான் றக்காக்
றீத வியல்பிலா தான். [கொன் 6

அற்றார்க்கொன் றுற்றுதான் செல்வம மிகநலம்
பெற்று டமியண்மூத் தற்று. 7

நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தறறு. 8

அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய
ஒண்பொருள் கொளவா பிறர். 9

சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனைய துடைத்து. 10

102. நாணுடைமை.

கருமத்தா லாணுத லாணுத் திருநுத்
னல்லவர் நாணுப் பிற. 1

ஊணுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு. 2
ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாணென்னும்
நன்மை குறித்தது சால்பு. 3

அணியன்றே நாணுடைமை சான்றோர்க்கஃ
பிணியன்றே பீடு நடை. [தின்றேற் 4
பிறர்பழியுந் தம்பழியும் நாணுவார் நாணுக்
குறைபதி யென்னு முலகு. 5
நாண்வேலி கொளாளாது மன்னே வியன்ஞாலம்
பேணலா மேலா யவர். 6
நாண வுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டா
லாண்டுறவா நாருள பவர். 7
பிறாநாணத் தக்கது தானுந வுயின்
அறநாண நன்கு துடைத்து. 8
குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பி னலஞ்சுடும்
நாணின்மை நின்றக் கடை. 9
நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை
நாண வுயிர்மருட்டி யற்று. 10

103. குடிசெயல்வகை.

கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும்
பெருமையிற பீடுடைய தில. 1

ஆள்வினையு மான்ற வறிவு மெனவிரண்டின்
நீள்வினையா னீளுங் குடி. 2

குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வம்
மடிதற்றுத தான்முந துறும். 3

சூழாமற் றானே முடிவெய்துந தங்குடியைத
தாழா துஞற்று பவர்க்கு. 4

குறற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்று முலகு. 5

நலலாண்மை யென்ப தொருவற்குத தான்பிறந்
இலலாண்மை யாக்கிக் கொளல், [த 6

அமரகத்து வன்கண்ணா போலத் தமரகத்து
மாற்றுவார் மேறறே பொறை. 7

குடிசெய்வார்க் கிலலை பருவம் மடிசெய்து
மானங் கருதக் கெடும. 8

இடுமபைக்கே கொள்கலங் கொல்லோ குடும
குற்ற மறைப்பா னுடம்பு. [பத்தைக் 9

இடுக்கண்கால கொன்றிட வீழும் அடுத்தூன்று
நலலா ளிலாத குடி. 10

104. உழவு.

சுழன்றுமோப் பின்ன துலகம் அதனை
யுழந்து முழுவே தலை. 1

உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்றூ
தெழுவாரை யெல்லாம் பொறுத்து. 2

உழுதுண்டு வாழுவாரே வாழுவாமற் றெல்லாந
தொழுதுண்டு பின்செல பவா. 3

பலகுடை நீழலுந் தங்குடைக்கீழக் காண்ப
ரலகுடை நீழ லவர். 4

இரவா ரிரப்பாக்கொன் றீவா கரவாது
கைசெய்தூண் மாலை யவர். 5

உழவிலா கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்
விட்டேமென் பாக்கு நிலை. 6

தொடிப்புழுதி கஃசா வுணக்கிற பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும. 7

ஏரினு நன்று லெருவிடுதல் கட்டபின்
நீரினு நன்றதன் காப்பு. 8

செல்லான் கிழவ னிருப்பின் நிலமபுலந்
தில்லாளி னூடி விடும். 9

இலமென் றசைஇ யிருப்பாரைக் க. னின்
நிலமென்னும் நல்லாள நகும். 10

104

105. நல்குரவு

இன்மையி னின்னாத தியாதெனின் இன்மையி
னின்மையே யின்னா தது. 1

இன்மை யெனவொரு பாவி மறுமையு
மிம்மையு மின்றி வரும். 2

தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக
நல்குர வென்னும் நசை. 3

இற்பிறந்தா கண்ணேயு மின்மை இளிவந்த
சொற்பிறக்குஞ சோர்வு தரும். 4

நல்குர வென்னு மிடும்பையுட் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும். 5

நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்
சொற்பொருள் சோர்வு படும். [ந்தார் 6

அறனுசாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும். 7

இன்றும் வருவது கொலலோ நெருநலுங்
கொன்றது போலு நிரப்பு. 8

நெருப்பினுட் டுஞ்சலு மாகும் நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பா டரிது. 9

துப்புர வில்லார் துவரத் துறவாமை
உபயிற்குங் காடிக்குங் கூறறு. 10

105

106. இரவு

இரக்க இரத்தக்கார் காணிற் கரப்பி
னவர்பழி தம்பழி யன்று. 1

இன்ப மொருவற் கிரத்தல் இரந்தவை
துன்ப முறுஅ வரின். 2

கரும்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்
நிரப்புமோ ரேர ருடைத்து. 3

இரத்தலு மீதலே போலுங் கரத்தல்
கனவிலுந் தேற்றுதார் மாட்டு. 4

கரப்பிலார் வையகத் துண்மையாற் கண்ணின்
நிரப்பவர் மேற்கொள் வது. 5

கரப்பிடும்பை யில்லாரைக் காணின் நிரப்பி
யெல்லா மொருங்கு கெடும். [டும்பை 6

இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழுந்
முள்ளு ளுவப்ப துடைதது. [துள்ள 7

இரப்பாரை யில்லாயி னீர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று. 8

ஈவார்க ணெனனுண்டாந் தோற்ற மிரந்து
மேவா ரிலாஅக் கடை. [கோண் 9

இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பி
தானேயுஞ் சாலுங் கரி. [டும்பை 10

106

107. இரவச்சம்.

கரவா துவந்தீயுங் கண்ணன்னா கண்ணும்
இரவாமை கோடி யுறும். 1

இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான். 2

இன்மை யிடுமபை யிரநதுதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில். 3

இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே இட
காலு மிரவொல்லாச் சால்பு. [மில்லாக் 4

தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த
துண்ணலி னூங்கினிய தில். 5

ஆவிற்கு நீரென் நிரப்பினும் காவிற்
கிரவி னிளிவந்த தில். 6

இரப்பனிரப்பாரை யெலலாம் இரப்பிற்
கரப்பா ரிரவன்மி னென்று. 7
இரவென்னு மேமாப்பி ரேணி கரவென்னும்
பாதாக்கப் பக்கு விடும். 8
இரவுள்ள வுளள மூருகும் கரவுள்ள
உள்ளதூஉ மின்றிக் கெடும். 9
கரப்பவர்க் கியாங்கொளிக்குங் கொல்லோ
சொல்லாடப் போஒ முயிர். [இரப்பவர் 10

107

108. கயமை.

மக்களே போல்வர் கயவ ரவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில். 1
நன்றறி வாரிற் கயவா திருவுடையர்
நெஞ்சத் தவல மிலா. 2
தேவ ரனையர் கயவ ரவருந்தா
மேவன செய்தொழுக லான். 3
அகப்பட்டி யாவாரைக் காணி னவரின்
மிகப்பட்டுச் செமமாக்குங் கீழ். 4
அச்சமே கீழகள தாசார மெச்சம்
அவாவுண்டே லுண்டாஞ் சிறிது. 5
அறைபறை யன்னா கயவாதாங் கேட்ட
மறையிறாக் குய்த்துணைகூ லான். 6
ஈங்கை விதிரா கயவா கொடிறுடைக்குங்

கூன்கைய ரல்லா தவாக்கு. 7
சொலலப் பயன்படுவர் சான்றோ கருப்பு
கொல்லப் பயன்படுங் கீழ். [போற 8
உடுப்பதூஉ முண்பதூஉங் காணிற் பிறாமேல்
வடுக்காண வறருகுங் கீழ். 9
எற்றிற் குரியா கயவரொன் றுற்றக்கால்
விற்றற் குரியா விழைது. 10

திருக்குறள்

காமத்துப்

இயல்கள்:	அதிகாரம்:
களவியல்	109—115
கற்பியல்	116—133

109. தகையணங்குறுத்தல்.

அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்
மாதர்கொன் மாலுமென் னெஞ்சு. [குழை 1

நோக்கிலே ணேக்கெதிர் நோக்குத லுக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து. 2

பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்
தெண்டகையாற் பேரமர்க் கட்டு. [தேன் 3

கண்டா ருயிருண்ணுந் தோற்றத்தாற் பெண்
பேதைக் கமர்த்தன கண். [டகைப் 4

கூற்றமோ கண்ணே பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்று முடைத்து. 5

கொடும்புருவங் கோடா மறைப்பின் நடுங்கஞர்
செய்யல மன்னிவள் கண். 6

கடாஅக் களிற்றின்மேற் கட்படா மாதர்
படாஅ முலைமேற் றுகில். 7

ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரு முட்குமென் பீடு. 8

பிணையேர் மடநோக்கும் நாணு முடையாட்
கணியெவனே ஏதில தந்து. 9

உண்டார்க ணல்ல தடுநருக் காமம்போற்
கண்டார் மகிழ்செயத வின்று. 10

110. குறிப்பறிதல்.

இருநோக் கிவ்ளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து. 1

கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கங் காமத்திற்
செம்பாக மன்று பெரிது. 2

நோக்கினு ணோக்கி யினைநஞ்சினுள் அஃதவள்
யாப்பினு ளட்டிய நீர். 3

யானைக்குங் காலில நிலனைக்கும் நோக்காக்காற்
ருனைக்கி மெல்ல நகும். 4

குறிக்கொண்டு நோக்காமை யல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும். 5

உருஅ தவர்போற் செவினுஞ் செருஅர்செவ்
ஒல்லை யுணரப் படும். 6

செருஅச் சிறுசொல்லுஞ் செற்ருர்போ னைக்
உருஅர்போன் றுற்ருர் குறிப்பு. [கும் 7

அசையியற் குண்டாண்டோ ரேளாயா னைக்
பசையினள் பைய நகும். [கப் 8

ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே யுள. 9

கண்ணெறு கண்ணினீண நோக்கொக்கின் வாய்ச்
சொற்கள
என்ன பயனு மில. 10

110

111. புணர்ச்சிமகிழ்தல்.

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள. 1

பிணிக்கு மருந்து பிறமன் னணியிழை
தன்னெஞ்சுக் தானே மருந்து. 2

தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொல்
தாமரைக் கண்ணு னுலகு. 3

நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னுங்
தீயாண்டுப் பெற்ரு னிவள். 4

வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பினு டோள. 5

உறுதோ றுயிரா தளிப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தி னியன்றன தோள். 6

தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்ரு ல்
அம்மா அரிவை முயக்கு. 7

வீழு மிருவர்க் கினிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு. 8

ஊட லுணர்தல் புணர்த லிவைகாமங்
கூடியார் பெற்ற பயன். 9

அறிதோ றறியாமை கண்டற்றுற் காமஞ
செறிதோறுஞ் சேயிழை மாட்டு. 10

111

112. நலம்புனைந்துரைத்தல்.

கன்னீரை வாழி யனிச்சமே நின்னினும்
மென்னீர ளாம்வீழ் பவள். 1

மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று. 2

மூரிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு. 3

காணிற் குவளை கவிழ்ந்து நிலனேக்கும்
மாணிழை கண்ணெவ்வே மென்று. 4

அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்
நல்ல படாஅ பறை. [பிற்கு 5

மதியும் மடந்தை முகனு மறியா
பதியிற் கலங்கிய மீன். 6

அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து. 7

மாதர் முகம்போ லொளிவிட வல்லையேற்
காதலை வாழி மதி. 8

மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயிற்
பலர்காணத தோன்றன் மதி. 9

அனிச்சமு மன்னத்தின் றூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம். 10

112

113. காதற்சிறப்புரைத்தல்

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர். 1

உடம்பொ டுயிரிடை யென்னமற் றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு. 2

கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழுந்
திருநுதற் கில்லை யிடம். 3

வாழத லுயிர்க்கன்ன ளாயிழை சாத
லதற்கன்ன ணீங்கு மிடத்து. 4

உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியே
னொள்ளழர்க் கண்ணாள் குணம். 5

கண்ணுள்ளிற் போகா ரிமைப்பிற் பருவரார்
நுண்ணியரெங் காத லவர். 6

கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணு
மெழுதேங் கரப்பாக் கறிந்து. 7

நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்ட
ளுஞ்சு துஞ் வேபாக் கறிந்து. 8

இமைப்பிற் கரப்பாக் கறிவ லணைத்திற்கே
ஏதில ரென்னுமிவ் வூர். 9

உவந்துறைவ ருள்ளத்து ளென்று மிகந்துறைவ
ரேதில ரென்னுமிவ் வூர். 10

113

114. நாணுத்துறவுரைத்தல்

காம முழந்து வருந்தினைக் கேம
மடலல்ல தில்லை வலி. 1

நோனு உடம்பு முயிரும் மடலேறும்
நாணினை நீக்கி நிறுத்து. 2

நாணெடு நல்லாண்மை பண்டுடையே னின்று
காமுற்று ரேறும் மடல். [டையேன் 3
காமக் கடும்புன லுய்க்குமே நாணெடு
நல்லாண்மை யென்னும் புணை. 4

தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு

மாலை யுழக்குந் துயர. 5

மடலூர்தல் யாமத்து முள்ளுவேன் மன்ற
படலொல்லா பேதைக்கென் கண். 6

கடலன்ன காம முழந்து மடலேறுப்
பெண்ணிற் பெருந்தக்க தில். 7

நிறையரியர் மன்னளிய ரென்னது காமம்
மறையிறந்து மன்று படும். 8

அறிகிலா ரெல்லாரு மென்றேயென் காமம்
மறுகின் மறுகு மருண்டு. 9

யாங்கண்ணிற் காண நகுப அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு. 10

114

115. அலரறிவுறுத்தல்.

அலரெழ ஆருயிர் நிற்கு மதனைப்
பலரறியார் பாக்கியத் தால்: 1

மலரன்ன கண்ணு ளருமை யறியா
தலரெமக் கீந்ததிவ் வூர. 2

உரு அதோ ஊரறிந்த கௌவை யதனைப்
பெரு அது பெற்றன்ன நீர்த்து. 3

கவ்வையாற் கவ்விது காமம அதுவின்றேற்
றவ்வென்னுந் தன்மை யிழந்து. 4

களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றுற் காமம்
வெளிப்படுந தோறு மினிது. 5

கண்டது மன்னு மொருநா ளலர்மன்னுங்
திங்களைப் பாம்புகொண் டற்று. 6

ஊரவா கௌவை எருவாக அன்னைசொன்
னீராக நீளுமிந் நோய். 7

நெய்யா லெரிநுதுப்பே மென்றற்றுற கௌவை
காமம் நுதுப்பே மெனல். [யாற் 8

அலராநாண ஒல்வதோ அஞ்சலோம் பென்றூ
பலராநாண நீத்தக் கடை. 9

தாம் வேண்டி னல்குவர் காதலா யாம்வேண்டுங்
கௌவை யெடுக்குமிவ் வூர. 10

115

116. பிரிவாற்றுமை.

செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை. 1

இன்க ணுடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்க ணுடைத்தாற் புணர்வு. 2

அரிதரோ தேற்ற மறிவுடையா ரண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான். 3

அளித்தஞ ரெல்லவர் நீப்பிற் றெளித்தசொற்

றேறியாாக் குண்டோ தவறு. 4

ஓம்பி னமைந்தார் பிரிவோம்பன் மற்றவர்
நீங்கி னரிதாற் புணர்வு. 5

பிரிவுரைக்கும் வன்கண்ண ரா.பின் அரிதவர்
நல்குவ ரென்னும் கசை. 6

துறைவன் றுறந்தமை தூறருகொன் முன்கை
யிறைபிறவா நின்ற வளை. 7

இன்ற தினனில்லா வாழுதல் அதனினு
மின்ற தினியார்ப் பிரிவு. 8

தொடிற்சுடி னல்லது காமநோய் போல
விடிற்சுட லாற்றுமோ தீ. 9

அரிதாற்றி யல்லலைப் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர். 10

116

117. படர்மெலிந்திரங்கல்

மறைப்பேன்மன் யானிஃதோ நோயை இரைப்
கூற்றுநீர் போல மிகும். [பவர்க் 1

கரத்தலு மாற்றேனிந் நோயைநோய் செய்தார்க்
குரைத்தலு நாணுத் தரும். 2

